DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு. துர்கேஸ்வரன் | Father/Husband Name : மாரிமுத்து |
| Age : 57 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24.06.2026.

(Accused present.)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் பணியாற்றிய சார்பு ஆய்வாளர் ஹரிராம் என்பவரையும் அவருடைய கையெழுத்தும் எனக்கு நன்கு தெரியும். அவர் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 16.04.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் நிலைய அலுவலில் நடுச்சூரங்குடி கிழக்குத் தெருவை சேர்ந்த பவானி மகன் முத்துக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 69/2023 பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(ii) இ.த.ச -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்னர் 16.04.2023 ம் தேதி 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் குருசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் முத்துக்குமார், அஜித்குமார், அரவிந்த்குமார், ஞானசுந்தரி, சங்கரேஸ்வரி, கன்னியம்மாள், கலாவதி, கார்த்திக், ஞானகுரு, பவானி, முருகன் மற்றும் குருசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில், 16.04.2023 ம் தேதி 14.00 மணிக்கு சூரங்குடி பெரிய கண்மாய் கரையில் நின்றுகொண்டிருந்த எதிரிகள் தாஸ்குட்டி மற்றும் பாலமுருகனை கைது செய்தும், 14.15 மணிக்கு எதிரி தாஸ்குட்டி எந்தவித அசுறுத்தலோ ஆசைவார்த்தையோ இல்லாமல் தானக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் சேகர் மற்றும் குணசேகர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

7. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தாஸ்குட்டியிடம் எதிரி சூர்யா வைத்திருந்த கத்தியை கொடுத்ததாகவும், தாஸ்குட்டி வைத்திருந்த கத்தியையும், எதிரி

சூர்யா வைத்திருந்த கத்தியையும் சுடுகாட்டில் உள்ள முள்வேலி செடி தூருக்கு அடியில் மறைத்து வைத்ததாகவும், தன்னை அழைத்து சென்றால் மறைத்து வைத்துள்ள கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். (**ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

8. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் நடுச்சூரங்குடி ஊருக்கு தெற்கேயுள்ள சுடுகாட்டில் உள்ள முள்வேலி செடி தூருக்கு அடியில் இருந்து எதிரி தாஸ்குட்டி எடுத்து ஆஜர் படுத்திய சம்பவத்திற்கு பயன்படுத்திய மர கைப்பிடியுடன் கூடிய பித்தளை பூன் போட்ட கத்தி ஒன்று, பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று ஆகியவற்றை 15.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். (**அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும், மர கைப்பிடியுடன் கூடிய பித்தளை பூன் போட்ட கத்தி ஒன்று மற்றும் பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று ஆகியவை அ.சா.பொ.1 மற்றும் 2 ஆகவும் குறியீடு செய்யயப்படுகிறது**).

9. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் சாட்சிகள் சேகர் மற்றும் குணசேகர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்(**படிவம் –91 அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

10. 1வது எதிரி சூர்யா மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையிலும், மற்ற எதிரி மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரில் முன்பிணையில் சென்ற விவரம் தெரியவந்துள்ளது.

11. இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3க்கு சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அர்ச்சனா என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றுள்ளார்.**(அ.சா.2 க்கான விபத்து பதிவேடு அ.சா.ஆ. 9 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ. 10 ஆகவும் அ.சா.3 க்கான விபத்து பதிவேடு அ.சா.ஆ. 11 ஆகவும் காயச்சான்று அ.சா.ஆ. 12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

12. இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3க்கு மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சாத்தையா என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேடு பெற்றுள்ளார்.**(அ.சா.3 க்கான விபத்து பதிவேடு அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

13. அ.சா.3க்கு மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.வினோதினி என்பவரை விசாரணை செய்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து அவர் வழங்கிய காயச்சான்று பெற்றுள்ளார்.**(விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் வினோதினி வழங்கிய அ.சா.3க்கான காயச்சான்று அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

14. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(ii) இ.த.சவிலிருந்து , 147, 148, 294(b), 323, 324, 326, 506(ii) இ.த.சஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 15 ஆக குறியீடு**

<u>**செய்யப்படுகிறது**</u>)

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**</u>

15. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.2 மற்றும் அ.சா.3 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சான்று பொருளுக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P